# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 730/2025** Date: 20.01.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | கதிரவன் |
| Father's Name | : | தர்மலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 20.01.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செங்கொடிபுரத்தில் வசித்து மருத்துவம் மற்றும் ஊரக நலத்துரை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2025 ம் தேதி பகல் 1.30 மணிக்கு தருமபுரி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் எனக்கு சொந்தமான TN 29 BD 3125 Splendor Plus இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு முதல் தளத்திலுள்ள எனது அலுவலகத்தில் நான் வேலை முடித்துவிட்டு கீழே வந்தபோது பகல் சுமார் 3.00 மணிக்கு பார்த்தபோது நான் நிறுத்தியிருந்த எனது இருசக்கர வாகனம் காணவில்லை. அக்கம் பக்கம் தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. அதே நாளில் மாலை 5.30 மணிக்கு தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆகும்.**

2. பின்னர் 15.10.2025 ம் தேதி தருமபுரி நகர காவல் நிலையத்திலிருந்து எனது வாகனம் கிடைத்துவிட்டதாகவும், அதை அடையாளம் காட்டுமாறும் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எனது வாகனத்தை என்பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்திலுள்ள வாகனம் தான் என்னுடையது. **எனது வாகனம் அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகும்.**

போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. எனது அலுவலகத்திற்கும், தருமபுரி நகர காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 5 Km இருக்கும். நான் வாகனம் நிறுத்தியிருந்த இடத்தில் சுமார் 15 க்கும் மேற்பட்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. நான் வாகனம் நிறுத்தியதாக சொல்லப்படும் இடத்தில் கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டிருந்ததா என்றால் இல்லை. எனது வாகனம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு, யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. எதிரி எனது வாகனத்தை திருடவில்லை என்றும், எதிரிக்கும், எனது வாகத்திற்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் புகாரை காலதாமதமாக கொடுத்தற்கு காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை சுமார் 6 –7 முறை விசாரித்திருப்பார்கள். எனது வாகனம் கிடைத்தற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்து மறுவாக்குமூலம் எதுவும் பதிவுசெய்தார்களா என்றால் பதிவுசெய்தார்கள். எந்த தேதியில் மறுவாக்குமூலம் பதிவுசெய்தார்கள் என்றால் 14.10.2025 ல் பதிவுசெய்தார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.01.20 16:57:21 +0530